13-03-2022 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 20.01.1990

பிரம்மா பாபாவின் ஐந்து விசேஷ அடிகள்

இன்று விசேஷமாக அன்பான தந்தை தனது மிக அன்பான மற்றும் நெருங்கிய குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். அனைத்துக் குழந்தைகளும் அன்பானவர் களாக இருக்கிறீர்கள். ஆனால் மிக அன்பாக மற்றும் நெருங்கிய குழந்தைகள் என்றால் ஒவ்வொரு அடியிலும் பின்பற்றக் கூடியவர்கள். நிராகார தந்தை சாகார குழந்தைகளை சாகார ரூபத்தில் பின்பற்று வதற்காக சாகார பிரம்மா பாபாவை குழந்தைகளின் முன் நிமித்தமாக வைத்தார். அந்த ஆதி ஆத்மா நாடகத்தில் 84 பிறவிகளின் ஆரம்பத்திலிருந்து கடைசி வரை அனுபவம் செய்திருந் தார், சாகார ரூபத்தில் ரதமாக ஆகி குழந்தைகளுக்கு எளிதாக்கு வதற்கு எடுத்துக்காட்டாக ஆனார். ஏனெனில் சக்திசாலியான எடுத்துக்காட்டைப் பார்த்து பின்பற்றுவது எளிதாக இருக்கும். எனவே அன்பான குழந்தைகளுக்காக அன்பின் அடையாளமாக தந்தை பிரம்மா பாபாவை வைத்தார் மற்றும் ஒவ்வொரு அடியிலும் பின்பற்றுங்கள் என்ற சிரேஷ்ட ஸ்ரீமத் அனைத்துக் குழந்தைகளுக்கும் கொடுத்தார். அனை வரும் தன்னை பின்பற்றக் கூடிய நெருங்கிய ஆத்மா என்று புரிந்திருக்கிறீர்களா? பின்பற்று வது எளிதாக இருக்கிறதா? அல்லது கடினமாக இருக்கிறதா? பிரம்மா பாபாவின் அடிகளில் விசேஷமாக என்ன பார்த்தீர்கள்?

1) முதல் அடி - சர்வஸ்வ தியாகி. உடல் அளவில், மற்றும் லௌகீக சம்பந்தங்களை மட்டுமின்றி மனம்-புத்தியை சமர்ப்பணம் அதாவது மனம்-புத்தியில் ஒவ்வொரு நேரத்திலும் தந்தை மற்றும் ஒவ்வொரு காரியத்தில் ஸ்ரீமத்தின் நினைவு இருந்தது. இது தான் முதல் மற்றும் மிகப் பெரிய தியாகமாகும். சதா தன்னை நிமித்தம் என்று புரிந்து கொண்டு ஒவ்வொரு காரியத்திலும் விடுபட்டவராக மற்றும் அன்பானவராக இருந்தார். தேக சம்பந்தங்களிலிருந்து, நான் என்பதை தியாகம் செய்தார். எப்போது மனம்-புத்தியானது தந்தையிடம் அர்ப்பணம் ஆகிவிடுகிறதோ, அப்போது தேக சம்பந்தங்கள் தானாகவே தியாகம் ஆகிவிடும். ஆக முதல் தியாகம் - சர்வஸ்வ தியாகம்.

2) இரண்டாவது அடி - சதா கட்டளைப்படி நடந்தார். சுய முயற்சியானாலும், யக்ஞ பாலனைக்கான காரியமாக இருந்தாலும் ஒவ்வொரு நேரத்தில், ஒவ்வொரு விசயத்தில் கட்டளைப்படி நடந்தார். ஏனெனில் ஒரே ஒரு பிரம்மா பாபா தான் விசேஷ ஆத்மா ஆவார், அவருக்குத் தான் நாடகத்தில் விசித்திரமான பாகம் பதிவாகியிருக்கிறது. ஒரே ஆத்மா தாயாகவும் இருக்கின்றார், தந்தையாகவும் இருக்கின்றார். யக்ஞ பாலனைக்கு நிமித்த மாக இருந்தாலும் சதா கட்டளைப்படி நடந்தார். ஸ்தாபனைக்கான காரியம் விசாலமாக ஆகின்ற போதும் எந்த ஒரு கட்டளையையும் மீறவில்லை. ஒவ்வொரு நேரத்திலும் சரி பாபா என்பதன் பிரத்ட்சய சொரூபத்தில் எளிய முறையில் பார்க்க முடிந்தது.

3) மூன்றாவது அடி - ஒவ்வொரு சங்கல்பத்திலும் நன்றியுள்ளவராக இருந்தார். எவ்வாறு ஒரு பதிவிரதை தனது பதியைத் தவிர வேறு யாரையும் கனவிலும் கூட நினைவு செய்ய முடியாதோ, அவ்வாறு ஒவ்வொரு நேரத்திலும் ஒரு பாபாவைத் தவிர வேறு யாரு மில்லை என்ற நன்றியுணர்வின் பிரத்ட்சய சொரூபத்தை பார்க்க முடிந்தது. விசாலமான புது ஸ்தாபனைக்கான பொறுப்புகள் இருந்தும் நன்றியுணர்வின் பலத்தின் மூலம், ஒரே பலம் ஒரே நம்பிக்கை என்பதை பிரத்ட்சமாக செயலில் ஒவ்வொரு பிரச்சனையையும் எளிதாக கடந்து சென்றார் மற்றும் கடக்க வைத்தார்.

4) நான்காவது அடி - உலக சேவாதாரி. சேவையின் விசேஷதா - ஒருபுறம் மிக பணிவாக, உலக சேவகன், மற்றொருபுறம் ஞானத்தின் அதாரிட்டி. எவ்வளவு பணிவோ, அவ்வளவு கவலை யற்ற சக்கரவர்த்தி. சத்தியத்தில் பயமற்று இருப்பது - இது தான் சேவை யின் விசேஷதா. புது ஞானத்தின் காரணத்தினால் உறவினர்கள், அரசியல் தலைவர்கள், தர்மத் தலைவர்கள் எவ்வளவு எதிர்ப்புகள் செய்தனர்! ஆனால் சத்தியம் மற்றும் பயமற்ற நிலை என்ற பதவி யிலிருந்து சிறிதும் அசைக்க முடியவில்லை. இதைத் தான் பணிவு மற்றும் அதாரிட்டியின் சமநிலை என்று கூறப்படுகிறது. இதன் ரிசல்டை நீங்கள் அனைவரும் பார்த்துக் கொண்டிருக் கிறீர்கள். நிந்தனை செய்தவர்களும் மனதளவில் தலை வணங்கிக் கொண்டிருக்கின்றனர். சேவையில் வெற்றி பெறுவதற்கு விசேஷ ஆதாரம் பணிவான உணர்வு, பொறுப்புணர்வு, எல்லையற்ற உணர்வு ஆகும். இந்த விதியின் மூலம் வெற்றி சொரூபம் ஆனார்.

5) ஐந்தாவது அடி - கர்மபந்தனங்கள், கர்ம சம்பந்தகளிலிருந்து விடுபட்டிருந்தார். அதாவது சரீர பந்தனங்களிலிருந்து விடுபட்டு பரிஸ்தா, கர்மாதீத நிலையில் இருந்தார். விநாடியில் பற்றற்ற நிலை, நினைவு சொரூபத்தில் இருந்தார். நெருக்கத்தில் இருந்தார் மற்றும் சமம் ஆகிவிட்டார்.

ஆக இன்று சுருக்கமாக ஐந்து அடிகளை கூறினேன். கூறுவதற்கு அதிகம் இருக்கிறது. ஆனால் சாரத்தின் ரூபத்தில் இந்த ஐந்து அடிகளின் மீது அடி வைத்து நடப்பவர்களைத் தான் தந்தையைப் பின்பற்றுபவர் என்று கூறப்படுகிறது. இப்போது தனக்குள் கேளுங்கள் - எத்தனை அடிகளை பின்பற்றி இருக்கின்றேன்? சமர்ப்பனம் ஆகியிருக்கின்றேனா? அல்லது சர்வ அம்சத்தையும் சமர்ப்பனம் செய்திருக்கின்றேனா? சர்வ அம்சம் என்றால் - என்னுடைய சுபாவம் இவ்வாறு இருக்கிறது, என்னுடைய குணம் இவ்வாறு இருக்கிறது, விரும்பா விட்டாலும் சங்கல்பம் சென்று விடுகிறது, வார்த்தைகள் வெளிப்பட்டு விடுகிறது - இதை சர்வ அம்ச தியாகி என்று கூற முடியாது. தன்னை சமர்ப்பனம் என்று கூறிக் கொள்கிறீர்கள். ஆனால் சர்வ அம்ச தியாகம் - இதில் எனது-உனது என்பது ஏற்பட்டு விடுகிறது. எது தந்தையின் சுபாவமோ, சுவ பாவ் என்றால் ஆன்மீக உணர்வு. சன்ஸ்காரம் சதா தந்தைக்கும் சமமாக அன்பு, கருணை, முன்னேற்ற வேண்டும் என்ற உள்ளம் அதாவது பரந்த உள்ளம் என்று கூறப்படுகிறது. குறுகிய உள்ளம் என்றால் எல்லைக்குட்பட்ட தன்னுடையதைப் பார்ப்பதாகும் - தன்னைப் பற்றி, தனது சேவை நிலையத்தைப் பற்றி, சேவையில் தனக்குத் துணையாக இருப்பவர்களைப் பற்றி. பரந்த உள்ளம் என்றால் அனைவரும் என்னுடையவர்கள் என்ற அனுபவம் ஏற்பட வேண்டும். பரந்த உள்ளத்துடன் இருக்கும் போது சதா ஒவ்வொரு காரியமும் - உடல் அளவில்,

மனதளவில், செல்வத்தில், சம்பந்தங்களில் வெற்றி அதிகமாக கிடைக்கும். அதிக இலாபம் கிடைக்கும். குறுகிய உள்ளம் உடையவர்களுக்கு உழைப்பு அதிகமாகவும், வெற்றி குறைவாகவும் கிடைக்கும். முன்பே கூறியிருக்கின்றேன் - குறுகிய உள்ளம் உடையவர்களின் உண்டியல் மற்றும் சமையலறை சதா நிறைந்திருக்காது. சேவைக்குத் துணையாக இருப்பவர்கள் அதிக ஆறுதல் கூறுவார்கள் - நீங்கள் இதைச் செய்யுங்கள், நாம் செய்கின்றோம். ஆனால் தகுந்த நேரத்தில் சூழ்நிலை களைக் கூற ஆரம்பித்து விடுவார்கள். அதனால் தான் பரந்த உள்ள முடையவர் களைப் பார்த்து பாபா மகிழ்ச்சி அடைவார் என்று கூறப்படுகிறது. இரகசியங்களைப் புரிந்து கொண்ட வர்களிடத்திலும் பாபா சதா திருப்தி அடைகின்றார். ஆசிரியர்கள் அனைவரும் பரந்த உள்ளம் உடையவர்கள் தானே! எல்லையற்ற உயர்ந்ததிலும் உயர்ந்த காரியத்திற்கு நிமித்தமாக இருக்கிறீர்கள். நான் இந்த குறிப்பிட்ட ஏரியாவிற்கு நன்மை செய்பவன் அல்லது இந்த தேசத்திற்கு நன்மை செய்பவன் என்று கூறுவதில்லை தானே? உலகிற்கு நன்மை செய்பவர்கள் (விஷ்வ கல்யாணகாரிகள்) அல்லவா! இவ்வளவு பெரிய காரியத்திற்கு உள்ளமும் பரந்ததாக இருக்க வேண்டும் அல்லவா! பரந்த என்றால் எல்லையற்ற உள்ளம். நமக்கு எல்லையை உருவாக்கிக் கொடுத்தருக்கிறீர்கள்? எல்லை ஏன் உருவாக்கப்பட்டிருக் கிறது? காரணம் என்ன? குறுகிய உள்ளம் என்று ஆசிரியர்கள் கூறுவீர்களா? எவ்வளவு ஏரியா கொடுக் கப்பட்டிருந்தாலும் நீங்கள் சதா எல்லையற்ற உணர்வு வைக்க வேண்டும், எல்லைக்குட்பட்ட உள்ளத்துடன் இருக்காதீர்கள். உயர்ந்த பாபா எனில் உள்ளமும் பெரிய தாக இருக்க வேண்டும் அல்லவா! மதுவனத்தில் இருந்தாலும் எனக்கு மதுவனம் மட்டுமே இருக்கிறது, மற்றபடி பஞ்சாப், உத்திர பிரதேசம், கர்நாடகம் போன்றவைகள் குழந்தைகளுடையது என்று பிரம்மா பாபா நினைத்தாரா என்ன? பிரம்மா பாபாவின் மீது அனைவருக் கும் அன்பு இருக்கிறது அல்லவா! அன்பு இருக்கிறது என்றால் பின்பற்ற வேண்டும்.

அனைத்து ஆசிரியர்களும் பின்பற்றக் கூடியவர்களா? அல்லது என்னுடை சென்டர், என்னுடைய மாணவர்கள், என்னுடைய உதவியாளர் என்று நினைக்கிறீர்களா? என்னுடைய ஆசிரியர் என்று மாணவர்களும் நினைக்கிறீர்களா? தந்தையை பின்பற்றுவது என்றால் என்னுடையது என்பதை உன்னுடையதாக கலந்து விட வேண்டும், எல்லைக்குட்பட்டதை எல்லையற்றதில் கலந்து விட வேண்டும். இப்போது இந்த அடி மீது அடி வைப்பது அவசியமாகும். அனைவரின் சங்கல்பம், வார்த்தை, சேவையின் விதி எல்லையற்ற அனுபவம் ஏற்பட வேண்டும். இந்த ஆண்டு என்ன செய்ய வேண்டும்? என்று கேட்கிறீர்கள் அல்லவா! சுய மாற்றத்திற்காக எல்லைக்குட்பட்டதை சர்வ அம்ச சகிதமாக அழித்து விடுங்கள். யாரைப் பார்த்தாலும் அல்லது யார் உங்களைப் பார்த்தாலும் - எல்லையற்ற சக்ரவர்த்திக்கான போதை அனுபவம் ஆக வேண்டும். எல்லைக் குட்பட்ட உள்ளமுடையவர்கள் எல்லையற்ற சக்ரவர்த் திகளாக ஆக முடியாது. எத்தனை சென்டர் திறப்பீர்களோ அல்லது எத்தனை அதிகமாக சேவை செய்வீர்களோ அவ்வளவு பெரிய ராஜாவாக ஆவோம் என்று நினைக்காதீர்கள். இதில் சொர்க்கத்தின் பரிசு கிடைக்காது. சேவையும் செய்ய வேண்டும், சென்டரும் திறக்க வேண்டும். ஆனால் எல்லைக்குட்பட்டதின் பெயர், அடையாளம் இருக்கக் கூடாது. அவர் களுக்கு வரிசைக்கிரமமாக உலக இராஜ்ய அரியணை

கிடைக்கும். ஆகையால் இப்பொழுது சிறிது நேரத்திற்காக தனது உள்ளத்தை குஷிப் படுத்திக் கொண்டு அமர்ந்து விடாதீர்கள். எல்லையற்ற நறுமணம் உடைய பாபாவிற்குச் சமம் மற்றும் நெருக்கத்தில் இப்பொழுதும் இருக்க வேண்டும் மற்றும் 21 பிறவிகளுக்கும் பிரம்மா பாபாவின் நெருக்கத்தில் இருப்பீர்கள். ஆக இப்படிப்பட்ட பரிசு வேண்டுமா? அல்லது இப்போதைக்கானது வேண்டுமா? அதிக ஆசிரியர்கள் உள்ளனர், அதிக மாணவர்கள் உள்ளனர் .... இந்த அதிக அதிக என்பது இருக்கக் கூடாது. தைரியம் இருக்கிறது அல்லவா? ஒருவரை ஒருவர் பின்பற்றாதீர்கள். தந்தையை பின்பற்றுங்கள்.

இரண்டாவது விசயம் - பாப்தாதா வார்த்தைகளின் மீதும் விசேஷ கவனம் ஏற்படுத்தியிருந்தார். இந்த ஆண்டு தனது வார்த்தைகளின் மீது விசேஷ கவனம் கொடுங்கள். வார்த்தைகளுக்கான கட்டளைகள் அனைவருக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. இதில் பரிசும் கிடைக்கும். சத்தியம் மற்றும் தூய்மையாக தன்னுடைய சார்ட் வைக்க வேண்டும். சத்திய தந்தையின் குழந்தைகள் அல்லவா! பாப்தாதா அனைவருக்கும் கட்டளையிடுகின்றார் - சேவையானது ஸ்திதியை பாதிக்கிறது எனில் அந்த சேவையில் வெற்றி பெற முடியாது. சேவை குறைவாக செய்தாலும் பரவாயில்லை. ஆனால் ஸ்திதியை குறைத்துக் கொள்ளாதீர்கள். எந்த சேவை ஸ்திதி கீழே கொண்டு செல்கிறதோ, அதை சேவை என்று எப்படி கூற முடியும்? ஆகையால் பாப்தாதா அனைவருக்கும் மீண்டும் இதையே கூறுகின்றார் - சதா சுய ஸ்திதி மற்றும் சேவை அதாவது சுய சேவை மற்றும் மற்றவர்களது சேவை ஒன்றாக சதா செய்யுங்கள். சுய சேவையை விட்டு விட்டு சேவை செய்வதில் வெற்றி கிடைக்காது. சுய சேவை, மற்றவர்களுக்கு சேவை - இதில் தைரியம் வையுங்கள். சர்வசக்திவான் பாபா உதவியாளராக இருக்கின்றார். ஆகையால் தைரியம் வைத்து இரண்டிலும் சமமாக இருந்து முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். பலவீனமாக ஆகாதீர்கள். அநேக முறை நிமித்தமாக ஆகியிருக்கும் வெற்றி ஆத்மா. இவ்வாறு வெற்றி ஆத்மாக்களுக்காக எதுவும் கடினம் கிடையாது, கடின உழைப்பு இருக்காது. கவனம் மற்றும் பயிற்சி - இதுவும் எளிதாக மற்றும் இயற்கையாக அனுபவம் செய்வீர்கள். கவனத் திற்கான டென்சனும் இருக்கக் கூடாது. சிலர் கவனத்தை டென்சனாக மாற்றி விடுகின்றனர். பிராமண ஆத்மாக்களின் உண்மையான சம்ஸ்காரம் - கவனம் மற்றும் பயிற்சி ஆகும். நல்லது.

பாக்கி இருப்பது உலக நன்மைக்கான சேவையின் விசயம். ஆக இந்த ஆண்டு ஒவ்வொரு சேவை நிலையமும் தொடர்பில் இருப்பவர்களுக்கு அழைப்பு கொடுத்து அன்பான சந்திப்பு நிகழ்ச்சி செய்யுங்கள். வர்க்கங்களாக செய்தாலும் சரி, கிடைத்தது செய்தாலும். ஆனால் அந்த ஆத்மாக்களின் மீது விசேஷ கவனம் செலுத்துங்கள். தனிப் பட்ட முறையில் சந்தியுங்கள். தபால் மட்டும் அனுப்பி வைக்கிறீர்கள் எனில் அதன் ரிசல்ட் குறைவாக வெளிப்படுகிறது. சுயமாக வரக் கூடிய மாணவர்களின் குழுவை உருவாக்குங்கள், பிறகு அவர்களில் சிலருக்கு தனிப்பட்ட முறையில் நெருக்கத்தில் வருவதற்கு நிமித்தமாக ஆக்குங்கள். இதன் மூலம் அனைத்து மாணவர்களும் பிசியாக இருப்பார்கள், சேவையும் தேர்ந்தெடுக்கப்பட்டு விடும். அப்படிப்பட்ட ஆத்மாக்களுக்கும் ஏதாவது புதிய விசயங்களைக் கூற வேண்டும். நல்ல உலகம் எப்படி இருக்கும்? என்பதைப் பற்றி தெளிவுபடுத்தி இருக்கிறீர்கள். இப்பொழுது அவர்கள் தன் மீது கவனம்

ஏற்படுத்துங் கள். அதற்கு சுய முன்னேற்றம் மற்றும் சுய முன்னேற்றத்திற்கு ஆதாரம் என்ற தலைப்பு வையுங்கள். இந்த புது விசயத்தை கூறுங்கள். இந்த சுய முன்னேற்றத் திற்காக ஆன்மீக பட்ஜெட் உருவாக்குங்கள், மேலும் பட்ஜெட்டில் சதா இலாபத்திற்கான திட்டம் உருவாக்கப் படும். ஆக ஆன்மீக இலாபம் எது? நேரம், வார்த்தை, சங்கல்பம் மற்றும் சக்தியை வீணானவையிலிருந்து மிகச் சிறந்ததாக மாற்ற வேண்டும். அனைவருக்கும் இப்பொழுது சுயத்தின் மீது கவனம் ஏற்படுத்துங்கள். சுய மாற்றத்திற்காக என்று குழந்தைகள் தலைப்பு உருவாக்கியிருந்தீர்கள். ஆனால் இந்த ஆண்டு ஒவ்வொரு சேவை நிலையத்திற்கும் சுதந்திரம் இருக்கிறது. யார் எவ்வளவு செய்ய முடியுமோ, தனது சுய முன்னேற்றத்தின் கூடவே - முதலில் சுய இலாபத்திற்கான பட்ஜெட் உருவாக்க வேண்டும். மேலும் சேவையில் மற்றவர் களுக்கு இந்த விசயத்தின் அனுபவத்தை ஏற்படுத்துங்கள். ஒருவேளை பெரிய நிகழ்ச்சி வைக்க முடியும் எனில் செய்யுங்கள். இல்லையெனில் சிறிய நிகழ்ச்சி செய்யுங்கள். ஆனால் சுய சேவை மற்றும் உலக சேவையில் சமமாக இருப்பதில் கவனமாக இருங்கள். சேவையில் பிசியாக இருப்பதால் சுய சேவைக்கு நேரம் கிடைக்கவில்லை என்று இருக்கக் கூடாது. ஆக இந்த ஆண்டு சேவைக்கான சுதந்திர ஆண்டாகும். எவ்வளவு விரும்புகிறீர்களோ அவ்வளவு செய்யுங்கள். இரண்டு திட்டங்களையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். வேறு ஏதாவது சேர்க்க வேண்டுமெனில் திட்டத்துடன் இரத்தினத்தையும் சேர்த்துக் கொள்ளுங்கள். தந்தை எப்பொழுதும் குழந்தைகளை முன் வைக்கின்றார். நல்லது.

நாலா புறங்களிலும் தந்தையை பின்பற்றக் கூடிய அனைத்து சிரேஷ்ட ஆத்மாக் களுக்கு, சதா இரட்டை சேவையை சமமாக வைத்து தந்தையின் ஆசிர்வாதத்திற்கு அதிகாரி யாக இருக்கும் ஆத்மாக்களுக்கு, சதா எல்லையற்ற சக்ரவர்த்தி - இப்படிப்பட்ட இராஜயோகி, சகஜயோகி, இயற்கையான யோகி, சதா அநேக முறை வெற்றியடைந்த நம்பிக்கை மற்றும் போதையில் இருக்கக் கூடிய மிக சகயோகி, அன்பான குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

அவ்யக்த பாப்தாதாவுடன் தனிப்பட்ட சந்திப்பு: நான் ஒவ்வொரு கல்பத்திலும் பூஜ்ய ஆத்மாவாக இருக்கின்றேன் என்று அனுபவம் செய்கிறீர்களா? பல முறை பூஜைக்குரியவர் களாக ஆகியிருக் கிறீர்கள், மீண்டும் பூஜைக்குரியவர்களாக ஆகிக் கொண்டிருக்கிறீர்கள். ஏன் பூஜைக்குரியவர் களாக ஆகிறீர்கள்? ஏனெனில் யார் சுயம் சுவமானத்தில் இருக்கிறார் களோ, அவர்களுக்கு தானாகவே மற்றவர்கள் மூலம் மரியாதை கிடைக்கும். சுவமானத்தை அறிவீர்களா? எவ்வளவு உயர்ந்த சுவமானம்? எவ்வளவு உயர்ந்த சுவமானம் உடையவர் களாக இருக்கட்டும், ஆனால் அவர்கள் உங்கள் முன் ஒன்றும் கிடையாது. ஏனெனில் அவர்களது சுவமானம் எல்லைக்குட் பட்டது, உங்களுடையது ஆன்மீக சுவமானம் ஆகும். ஆத்மா அழிவற்றது எனில் சுவமானமும் அழிவற்றது. அவர்களுடையது எல்லைக்குட்பட்ட மரியாதை. தேகம் அழியக் கூடியது எனில் சுவமானமும் அழியக் கூடியது. ஒருவர் ஜனாதிபதி ஆகின்றார் அல்லது அமைச்சர் ஆகின்றார். சரீரம் விட்டு விட்டால் சுவமானமும் சென்று விடும். பிறகு ஜனாதிபதியாக இருப்பாரா என்ன? ஆனால் உங்களுடைய சுவமானம் என்ன? சிரேஷ்ட ஆத்மா, பூஜைக்குரிய ஆத்மா. ஆத்மாவின் நினைவில் இருக்கிறீர்கள், ஆகையால் அழிவற்ற சுவமானமாகும். நீங்கள்

அழியக் கூடிய சுவமானத்தின் பக்கம் ஈர்க்கப்பட முடியாது. அழிவற்ற சுவமானமுடையவர்கள் பூஜைக்குரிய ஆத்மாக்களாக ஆகின்றனர். இன்று வரை தனது பூஜையை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். தனது பூஜ்ய சொரூபத்தைப் பார்க்கின்ற பொழுது இது என்னுடைய ரூபம் என்ற நினைவு வருகின்றது அல்லவா! பக்தர்கள் தங்களது பாவனையின் அநுசாரமாக ரூபத்தை கொடுத்து விட்டார்கள். ஆனால் பூஜைக்குரியவர்களாக இருப்பது நீங்கள் தான். எந்த அளவிற்கு சுவமானத்தில் இருப்பீர்களோ, அந்த அளவிற்கு பணிவு. சுவமானத்தின் அபிமானம் கிடையாது. நான் தான் உயர்ந்தவனாக ஆகிவிட்டேன், மற்றவர்கள் தாழ்ந்தவர்களாக இருக்கிறார்கள், அவர்கள் மீது வெறுப்பு ஏற்படுவது என்பது இருக்கக் கூடாது. எப்படிப்பட்ட ஆத்மாக்களாக இருந்தாலும் கருணைப் பார்வையுடன் பார்ப்பார்கள், அபிமானத்தின் பார்வையில் அல்ல. அபிமானமும் இல்லை, அவமானமும் இல்லை. இப்பொழுது பிராமண வாழ்க்கையில் இந்த நடத்தை கிடையாது. ஆக திருஷ்டி மாறி விட்டது அல்லவா! இப்பொழுது வாழ்க்கையே மாறி விட்டது எனும் போது திருஷ்டி தானாகவே மாறி விட்டது அல்லவா! சிருஷ்டியும் மாறி விட்டது. இப்பொழுது உங்களுடைய சிருஷ்டி (உலகம்) எது? உங்களுடைய சிருஷ்டி அல்லது உலகம் தந்தை மட்டுமே. தந்தைக்குள் குடும்பமும் வந்து விடுகிறது. இப்பொழுது யாரைப் பார்த்தாலும் ஆன்மீக திருஷ்டியுடன், உயர்ந்த திருஷ்டியுடன் பார்ப்பீர்கள். இப்பொபது சரீரத்தின் பக்கம் திருஷ்டி செல்லவே முடியாது. ஏனெனில் திருஷ்டி அல்லது கண்களில் சதா தந்தை நிறைந்திருக்கின்றார். யாருடைய கண்களில் தந்தை இருக்கின்றாரோ, அவர் தேக உணர்வில் எப்படி செல்ல முடியும்? தந்தை நிறைந்திருக்கின்றாரா? அல்லது நிறைந்து கொண்டிருக் கின்றாரா? தந்தை நிறைந்திருக் கும் போது வேறு யாரும் நிறைந்திருக்க முடியாது. உண்மை யில் கண்களின் அதிசயம் பிந்துவில் இருக்கிறது. பார்க்கும் காரியத்தை செய்வது யார்? சரீரக் கணக்கில் பிந்து தான் அல்லவா! ஒரு சிறிய பிந்து அதிசயம் செய்கிறது. ஆக தேகத்தின் கோணத்தில் ஒரு சிறிய பிந்து அதிசயம் செய்கிறது, ஆன்மீக கோணத்தில் தந்தை பிந்து கலந்திருக்கின்றார். ஆகையால் வேறு யாரும் கலந்து விட முடியாது. இவ்வாறு புரிந்திருக் கிறீர்களா? பூஜ்ய ஆத்மாக்களாக ஆகிவிடும் போது பூஜ்ய ஆத்மாக்களின் கண் சதா நிர்மலமாக காண்பிக் கின்றனர். அபிமானம் அல்து அவமானத்தின் கண்களாக காண்பிப்பது கிடையாது. எந்த ஒரு தேவன் அல்லது தேவியின் கண் நிர்மலமாக அல்லது ஆன்மீகமாக இருக்கும். ஆக இந்த கண் யாருடையது? ஒருவரைப் பற்றி ஏதாவது சங்கல்பம் வந்து விட்டால் நான் யார்? என்பதை நினைவில் கொண்டு வாருங்கள். என்னுடைய ஜடச் சிலையே ஆன்மீக கண் களுடையதாக இருக்கும் போது சைத்தன்யமான நான் எப்படி இருக்கின்றேன்? இன்று வரை மனிதர்கள் உங்களது மகிமை செய்யும் போது சர்வகுண சம்பன்ன, சம்பூர்ன நிர்விகாரி என்று கூறுகின்றனர். ஆக நீங்கள் யார்? சம்பூர்ன நிர்விகாரி அல்லவா! துளியளவும் எந்த விகாரமும் இருக்கக் கூடாது. என்னுடைய பக்தன் என்னை இந்த ரூபத்தில் நினைவு செய்து கொண்டிருக்கின்றார் என்பதை சதா நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். ஜடச் சித்திரம் மற்றும் சைத்தன்ய சரித்திரம் இரண்டிற்கும் வேறுயாடு இல்லை தானே? என்று சோதனை செய்யுங்கள். சரித்திரத்தின் மூலம் சித்திரம் (சிலை) உருவாக்கப்பட்டிருக்கிறது. சங்கமத்தில் நடைமுறையில் சரித்திரத்தை காண்பித்திருக்கிறீர்கள், அதனால் தான் சித்திரம் உருவாகியிருக்கிறது. நல்லது.

வரதானம்: சர்வசக்திகளின் சம்பன்னதா மூலம் உலகின் தடைகளை அழிக்கக் கூடிய விக்ன விநாசக் ஆகுக

யார் சர்வசக்திகளிலும் நிறைந்தவர்களாக இருக்கிறார்களோ, அவர்கள் தான் விக்ன விநாசக் ஆக முடியும். விக்னவிநாசன் முன் எந்த விக்னமும் வர முடியாது. ஒருவேளை ஏதாவது ஒரு சக்தியில் குறை இருந்தால் விக்னவிநாசக் ஆக முடியாது. எனவே சர்வ சக்திகளின் இருப்பு நிறைந்திருக்கிறதா? என்று சோதியுங்கள். சர்வசக்திகள் என்னுடைய ஆஸ்தியாகும், நான் மாஸ்டர் சர்வ சக்திவான் என்ற நினைவு மற்றும் போதையில் இருந்தீர்கள் எனில் எந்த தடையும் நிலைத்திருக்காது

சுலோகன்: யார் சதா சுப சங்கல்பங்களை படைக்கின்றார்களோ, அவர்களே டபுள் லைட் ஆக இருக்கின்றனர்.